# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22 : 20.



சகோ.காலேப் யோசுவா,
Tele. 04630 456157

" ஓரேப் "
திருவைகுண்டம் - 628 601,
தூத்துக்குடி மாவட்டம்.




## சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்கள்



சத்தியத்தை அறிந்திருக்கிற, நேசிக்கிற, சத்தியத்தில் நடக்கிற பிரியமானவர்களே, கிருபையும், இரக்கமும், சமாதானமும், சத்தியத்தோடும், அன்போடுங்கூட உங்களோடிருப்பதாக.

1. இந்நாட்களில் அது மகிழ்ச்சிக்குரிய ஊர் திருவிழாக்களானாலும், மத சம்பந்தமான பண்டிகைகளானாலும், திருநாட்களானாலும், கலை நிகழ்ச்சிகளானாலும், விளையாட்டு நிகழ்ச்சிகளானாலும், ஆவிக்குரிய கூட்டங்கள், சுவிசேஷக் கூட்டங்கள் என்ற பெயரில் மத சம்பந்தமான நிகழ்ச்சிகளானாலும், பொது வாழ்க்கையில் எந்தவிதமான நிகழ்ச்சிகளானாலும், பிறப்பு, பருவமடைதல், திருமணம், இறப்பு போன்ற குடும்ப நிகழ்ச்சிகளானாலும் அங்கு சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்களின் இசையோடுகூடிய பாடல்கள் இல்லாமல் இல்லை. நாம் இங்கு இந்த சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்களின் ஆரம்பம், முன் நாட்களில் இதன் உபயோகங்கள், இந்நாட்களில் இது உண்மை கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய ஆராதனைகளில் தேவைதானா என்பதான காரியங்களைக் குறித்து இங்கு தியானிப்போம். நம்மில் வாசம்பண்ணும் சத்தியஆவி நம்மை சகல சத்தியத்துக்குள்ளும் வழிநடத்திச் செல்வாராக. ஆமென்.

2. தேவனுடைய வார்த்தையின்படி சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்களுக்கு முன்னோடியாக அதற்குரியவன் அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி என்று அழைக்கப்படும் லூசிபர் ஆகும். இவன் தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் காப்பாற்றுகிறதற்காக வைக்கப்பட்டிருந்த அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப் ஆகும். தியானியுங்கள். எசே.28:13-14.

3. இதைக்குறித்து சற்று விளக்கமாக உங்களுக்கு இங்கு எழுதுகிறேன். பாருங்கள், தேவன் ஒரு ஆவி. **God is a spirit.** யோ.4:24. தேவன் என்றால் ஆராதனைக்குரியவர் என்று பொருள். **God is an object of worship.** எதுவும் சிருஷ்டிக்கப்படும்முன், இந்த நித்தியஆவி, தேவன் என்று அழைக்கப்படவில்லை. ஏனென்றால் இவரை ஆராதிக்க இவருக்கென்று ரூபம் எதுவும் இல்லை, மேலும் இவரை ஆராதிக்க சிருஷ்டிகள் எதுவும் இல்லை. ஆக இந்த நித்தியஆவி, தான் தேவன் என்று அறியப்படும்பொருட்டு, தனக்கென்று ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தை உடையவரானார். இதுதான் **வார்த்தை**. (Logos). **வார்த்தை** காணக்கூடாதபடி எங்கும் வியாபித்திருக்கும் ஆவியின் மானிட சாயலையுடைய ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரம். இப்பொழுது **வார்த்தை**யில் தேவன், தேவன் என்று அழைக்கப்படலானார். எங்கும் வியாபித்திருக்கும் இந்த நித்தியஆவி எப்பொழுது தனக்கென்று ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தை உடையவரானாரோ, அதாவது எப்பொழுது தன்னை ஒரு ஆவிக்குரிய சரீரத்தில் சிருஷ்டித்தாரோ அந்த வேளை தான் **ஆதி** என்று அழைக்கப்படலாயிற்று. **ஆதி**யிலே **வார்த்தை** இருந்தது. அந்த **வார்த்தை** தேவனாயிருந்தது. யோ.1:1.

4. தேவன் ஒருவரே எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கவேண்டும். ஆதலால், தேவன் தமக்கென்று ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தை உடையவராகி, சகல சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானார். கொலோ.1:15. இவ்வாறாக சகலசிருஷ்டிக்கும் முந்தின பேறுமானதினால், அந்த மகிமையின் சரீரத்தில் தேவன், தேவகுமாரன் என்று அழைக்கப்படலானார். ஆக நித்தியஆவி **வார்த்தை**யில் தேவன் என்று அழைக்கப்பட்டு, தேவகுமாரனில் தொழுகைக்குரியவரானார். தேவன் தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச்செய்து தேவன், தேவன் என்று அறியப்படும்படி, அவரைத் தொழுதுகொள்ள தேவதூதர்களைச் சிருஷ்டித்து, தேவதூதர்கள் யாவரும் தேவகுமாரனைத் தொழுது கொள்ளக்கடவர்கள் என்றார். எபி. 1:7.

5. இந்த தேவதூதர்களில் பிரதானமானவன் தான் லூசிபர். இவன் சிருஷ்டிக்கப்பட்ட நாளில் இவன் மேளவாத்தியங்களும், இவன் நாகசுரங்களும் இவனிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது. எசே. 28:13. **The workmanship of thy timbrels and of thy flutes was prepared in thee in the day that thou wast created.**

6. இப்பொழுது கவனியுங்கள், கர்த்தர் யோபுவிடம் நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கே இருந்தாய்? அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் (தேவதூதர்கள்) கெம்பீரமாய்ப்பாடி தேவ புத்திரர் (உலகததோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். எபே.1:4.) எல்லாரும் கெம்பீரித்தார்களே என்றார். யோபு. 38:4-7. **The morning stars sang together and all the sons of God shouted for**

joy. ஆம், லூசிபர் தலைமையில் தேவதூதர்கள் இசையுடன்கூடிய பாடல்களினால்பாட, அதில் தேவபுத்திரர் கெம்பீரித்து மகிழ்ந்தார்கள். பரலோகத்தில் தேவனுடைய நாம மகிமைக்காக இசை பயன்படுத்தப்பட்டது. இதிலிருந்து இனிமையானபாடல்கள், கீதவாத்தியங்களின் இசை இவைகளுக்கு முன்னோடி லூசிபர் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளலாம். இதுவரை இவனில் அநியாயம் கண்டுபிடிக்கப்படவில்லை. எசே. 28:15.

7. அடுத்து லூசிபர் தன் இருதயத்தை தேவனின் இருதயத்தைப் போலாக்கி, மேட்டிமைக் கொண்டு; நான் தேவன், நான் சமுத்திரத்தின் நடுவே தேவாசனத்தில் வீற்றிருக்கிறேன் என்று சொன்னதினால், உன்னதமான வருக்கு ஒப்பாவேன் என்று தன் இருதயத்தில் சொன்னபோது, இவனில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டு, வானத்திலிருந்து கீழேத்தள்ளப்பட்டு விழுந்தான். வானத்திலிருந்து பூமியிலே தள்ளப்பட்டபோது இவன் ஆடம்பர மும், வாத்தியங்களின் முழக்கங்களும் பாதாளத் தில் தள்ளுண்டுபோயிற்று. தியானியுங்கள். எசே.28:2, ஏசா.14:11-15. தரையிலே தள்ளப்பட்ட லூசிபர் தேவனு டைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தான். எசே.28:13.

8. ஏதேனில் இருந்த இவன், அந்தக்காட்டு ஜீவனுக்குள் நுழைந்தான். ஆதி.3:1. அது சகலகாட்டு ஜீவன் களைப்பார்க்கிலும் தந்திரமுள்ளதாயிருந்தது, ஏவாளை வஞ்சித்தது. ஆதி.3:13. அந்தக்காட்டு ஜீவன் மூலமாக சாத்தானின்வித்து ஏவாள் வயிற்றில் உருவெடுத்து உலகத்தில் பிரவேசித்தது. காயீன் அந்த பொல்லாங்கனால் உண்டானவன். 1யோ.3:12. இந்த காயீன் வம்சாவழியில் லூசிபராகிய சாத்தான் தன் கீதவாத்தியங்களை உலகத்தில் மீண்டும் பிரவேசிக்கச்செய்தான். இப்பொழுது லூசிபர் தன் இனிமையான இசையை தாறுமாறாக்கி அதை தீமைக்காகப் பயன்படுத்தி, மக்களை ஆவிக்குரிய துதி ஆராதனையிலிருந்து விலகச்செய்து, அதே நேரத்தில் அவர்கள் உண்மையான வழிபாட்டில் இருப்பதாக நினைக்கச்செய்து வஞ்சிக்கிறான்.

9. இது எப்படி? கவனியுங்கள். அந்தப்பொல்லாங்கனால் உண்டான இந்த காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி அவனைக் கொலைசெய்தான். ஆதி.4:8. ஆதலால் காயீன் இந்தப்பூமியில் சபிக்கப்பட்டான். ஆதி.4:11. இதினிமித்தமாக இவன் கர்த்தருடைய சந்நிதியை விட்டுப்புறப்பட்டான். ஆதி.4:16. அதன்பின் காயீன் பட்டணங்களைக்கட்டினான். ஆதி.4:17. இவன் சந்ததியார் தான் இந்த உலகத்தில் நாகரீகத்தையும், ஆடம்பரத்தையும் கொண்டுவந்தார்கள். இவன் வம்சாவழியில் வந்த யூபால் என்பவன்தான் இசைக்கருவிகளின் தகப்பன் என்று அழைக்கப்படலானான். சாத்தானின் வித்தாகிய காயீன் வம்சாவழியில் வந்தவர்கள்தான் சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்களை உருவாக்கினர். அதோடு மட்டுமல்ல போர்க்கருவிகளுக்கும் ஆசாரியர்கள். ஆதி.4:21,22. ஒரு பெண்ணுக்குமேல் பல பெண்களை மணக்கும் வழக்கம் **(Polygamy)** இவன் சந்ததியில்தான் ஆரம்பமானது. ஆதி.4:19. இவ்வாறாக இந்தப்பூமியில் உருவெடுத்த எல்லாவிதமான சீர்கேடுகளுக்கும், மாறுபாடுகளுக்கும், தாறுமாறுகளுக்கும் காயீன் சந்ததியாரே மூலக்காரணர்.

10. மேலும் இந்த காயீன் வம்சாவழியில் தான் இந்தப்பூமியில் ஞானிகள், விஞ்ஞானிகள், கல்விமான்கள், புத்திமான்கள், பொன்பொருள் சம்பாத்தியத்தில் திறமைக்கொண்டவர்கள், கள்ளத்தராசினால் செல்வந்தர்களான வர்கள், அழகுள்ளவர்கள், மேட்டிமை குணம் உள்ளவர்கள் காணப்பட்டார்கள். தியானியுங்கள். எசே.28அதி. இங்கு தேவன் தீருவின் அதிபதியிடம் பேசுவதுபோல் சாத்தானிடம் பேசுகிறார். இங்குக் கூறப்பட்டுள்ள சாத்தானின் பண்புகள், குணங்கள் எல்லாவற்றையும் ஆவியில் மறுபிறப்பு அடையாத பெயர்க்கிறிஸ்தவர்கள், விக்கிரக ஆராதனைக்காரர்கள், உலகத்தை சிநேகிக்கிறவர்கள், இப்பிரபஞ்சத்திற்குரியவர்கள் மத்தியில் காணலாம்.

11. இவ்வாறாக சாத்தான், காயீன் சந்ததி மூலமாக மனுபுத்திரர் மகிழ்ந்து, மிக்க இன்பமாயிருக்க உருவாக்கின பலவிதமான சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்களின் பெயர்களை இங்குத் தருகிறேன்.

அ. கின்னரம். ஆதி.4:21. **Harp. Probably a zither or lyre.**
ஆ. சுரமண்டலம். சங்.150:3. **Harp. Probably a zither or lyre.** இது செமனித் என்னும் இசையில் வாசிக்கப்பட்டது. 1நாளா.15:21.
இ. நாகசுரம். ஆதி.4:21. **Organ. Probably a pipe.**
ஈ. தீங்குழல் சங்.150:4. **Flute. Probably a organ.**
உ. புல்லாங்குழல். 1கொரி. 14:7. **Flute.**
ஊ. தம்புரு. சங்.149:3. **Timbrel. Probably a tambourine.** இது அல்மோத என்னும் இசையில் பாடப்பட்டது. 1நாளா.15:20.
எ. மேளங்கள். 1சாமு.18:6. **Tabrets. Probably timbrels.**
ஏ. எக்காளம். சங்.150:3. **Trumpet. Heb: Shofar. The horn of a cow or ram.**
ஐ. எக்காளம். 1நாளா.15:28. **Cornets.**
ஒ. வீணை. சங்.150:3. **Psaltery. Probably a guitor.**
ஓ. யாழ். சங்.150:4. **Stringed instruments.**
ஔ. கை கொட்டுதல். சங்.47:1. **Clapping hands.**
ஃ. ஓசையுள்ள கைத்தாளங்கள். சங்.150:5. **Loud cymbals.**
அ1. பேரோசையுள்ள கைத்தாளங்கள். சங்.150:5. **High sounding cymbals.**
அ2. பஞ்சலோகக் கைத்தாளங்கள். 1சாமு.15:19. **Cymbals of bronze.**

12. சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்களின் இனியக்குரலும், பாடலும் ஒன்றுசேர்ந்து ஜனங்களின் உள்ளான எழுச்சியைத்தூண்டி சற்று நேரத்திற்கு அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இனிமையான இசையைக்கேட்டு, அதன் தூண்டுதலினால் உணர்ச்சிவசப்பட்டு, மக்கள் மனதில் பரவசம் அடைகிறார்கள். உதாரணமாக கர்த்தருடைய ஆவி சவுலை விட்டு நீங்கினபின்பு, கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாதஆவி அவனை கலங்கப்பண்ணிக் கொண்டிருந்தது. தேவனால் விடப்பட்டஆவி சவுலைப்பிடிக்கும்போது, தாவீது சுரமண்டலத்தை எடுத்து தன் கையினால் வாசிக்க அதினாலே அந்தப் பொல்லாதஆவி சவுலைவிட்டு நீங்க அவன் ஆறுதல்அடைந்து சொஸ்தமாவான். 1சாமு.16:14-23. ஆனால் மீண்டும் அந்தஆவி அவனுக்குள் வரும். அப்பொழுது மீண்டும் தாவீது சுரமண்டலத்தை எடுத்து வாசிக்க அந்தஆவி அவனைவிட்டு நீங்கும். இவ்வாறாக இசை சற்று நேரத்திற்கு மட்டுமே சவுலுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. மன துக்கமுள்ளவனுக்கு பாட்டும் இசையும் சிறிதுநேரம் ஆறுதலைத்தருகிறது. மனமகிழ்ச்சி முகமலர்ச்சியைத்தருகிறது. தாவீது ஒரு திறமைவாய்ந்த இசை உருவாக்கும் மேதை, இனியபாடகன் மற்றும் இசை அமைப்பாளன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**<u>பாடல்கள் அத்துடன் சத்தமிடுகிற உயிரில்லாதவாத்தியங்களின் இனியஇசை மனுக்குலத்தில் பற்பல காரியங்களுக்காக பிரயோஜனப்படுத்தப்பட்டது. அதுகுறித்து இங்கு தியானிப்போம்.</u>**

13. லாபான், யாக்கோபினிடத்தில் நான் உன்னைச்சந்தோஷமாய், சங்கீதம், மேளதாளம், கின்னரம் முழக்கத்துடன் அனுப்புவேனே, இப்படியிருக்க நீ எனக்கு அறிவியாமல் திருட்டளவாய் என்னிடத்திலிருந்து புறப்பட்டு வந்ததென்ன என்றுகூறினான். ஆதி.31:27. இதிலிருந்து ஒருவருக்கொருவர் பிரிவு உபசார நிகழ்ச்சிகளில் பாடலும் இசையும் இடம்பெற்றதாகத் தெரிகிறது.

14. பொதுவாக எங்கெங்கு மகிழ்ச்சியோ அங்கு கீதவாத்தியங்களுடன் ஆடல்பாடல் காணப்படுகிறது. தாவீது தேவனுடைய பெட்டியை கிபியாவிலிருக்கிற அபினதாபின் வீட்டிலிருந்து கொண்டுவருகையில் தாவீதும் இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும் தேவதாரு மரத்தினால் பண்ணப்பட்ட சகலவித வாத்தியங்களோடும், சுரமண்டலம், தம்புரு, மேளம், வீணை, கைத்தாளம் ஆகிய இவைகளோடும் கர்த்தருக்கு முன்பாக ஆடிப்பாடிக் கொண்டு போனார்கள். 2சாமு.6:3,5.

15. தாவீது பெலிஸ்தனைக்கொன்று திரும்பி வந்தபின்பு, ஜனங்கள் திரும்ப வரும்போதும், ஸ்திரிகள் இஸ்ரவேலின் சகல பட்டணங்களிலுமிருந்து, ஆடல் பாடலுடன் புறப்பட்டு, மேளங்களோடும் கீதவாத்தியங்களோடும் சந்தோஷமாய் இராஜாவாகிய சவுலுக்கு எதிர்கொண்டு வந்தார்கள். அதோடு மட்டுமல்ல அவர்கள் முறை முறையாகப் பாடினார்கள் என்றும் காண்கிறோம். இவ்வாறாக ஜனங்கள் பகைஞன்மேல் தாங்கள் பெற்ற வெற்றியைக் கொண்டாடவும் கீதவாத்தியங்களின் இசையோடு ஆடிப்பாடி மகிழ்ந்தார்கள். 1சாமு.18:6.

16. இஸ்ரவேல் புத்திரர் பலத்தகையுடன் எகிப்தை விட்டுப்புறப்பட்டார்கள். ஆனால் பார்வோனின் இருதயம் கடினப்பட்டு இஸ்ரவேல் புத்திரரைப் பின்தொடர்ந்தான். முடிவில் கர்த்தர் அவர்களை கடலின் நடுவே கவிழ்த்துப்போட்டார். அப்பொழுது ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் என்னும் தீர்க்கதரிசியானவள் தன் கையிலே தம்புரை எடுத்துக்கொள்ள, சகல ஸ்திரிகளும் தம்புருவோடும் நடனத்தோடும் அவளுக்கு பின்சென்று தங்கள் வெற்றியை மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்கள். யாத்.15:20.

17. சந்தோஷமாயிருக்க, மனமகிழ்ச்சியாயிருக்க பாடலும் இசையும் அத்துடன் விருந்தும் பரிமாறப்பட்டது. ஜனங்கள் தம்புரையும், சுரமண்டலத்தையும் எடுத்துப்பாடி, கின்னரத்தின் ஓசைக்குச் சந்தோஷப்பட்டார்கள். லூக்.15:25,32; யோபு.21:12; 2நாளா.23:13,5:13; 1நாளா.15:16. போன்ற இடங்களில் இதுகுறித்து நாம் காணலாம். சாராயத்தை நாடி, அதிகாலமே எழுந்து, மதுபானம் தங்களை சூடாக்கும்படி தரித்திருந்து இருட்டிப்போகுமளவும் குடித்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு ஐயோ ! அவர்கள் சுரமண்டலத்தையும், தம்புருவையும், மேளத்தையும், நாகசுரத்தையும் அத்துடன் மதுபானத்தையும் வைத்து விருந்து கொண்டாடினார்கள். ஏசா.5:12. தீங்கு நாள் தூரமென்று எண்ணிக் கொடுமையின் ஆசனம் கிட்டி வரும்படிச் செய்து, தந்தக் கட்டில்களில் படுத்துக்கொண்டு தங்கள் மஞ்சங்களின் மேல் சௌக்கியமாய் சயனித்து, மந்தையிலுள்ள ஆட்டுக்குட்டிகளையும், மாட்டுத் தொழுவத்திலுள்ள கன்றுக்குட்டிகளையும் தின்று தம்புரை வாசித்துப்பாடி, தாவீதைப்போல் கீதவாத்தியங்களைத் தங்களுக்கு உண்டுபண்ணி பெரிய பாத்திரங்களில் மதுபானத்தைக்குடித்து, சிறந்த பரிமளத்தைலங்களைப் பூசிக்கொண்டு விருந்துக் கொண்டாடினார்கள். ஆமோஸ்.6:3-7.

18. பெண்கள் அதாவது கீதவாத்தியக்கன்னிகள் என்று அழைக்கப்படுபவர்கள் பிர.12:4, கீதவாத்தியத் தோடே நடனம் பண்ணுவது அந்நாட்களின் வழக்கமாயிருந்தது. உதாரணமாக சீலோவின் குமாரத்திகள் கீதவாத்தியத்தோடே நடனம் பண்ணினார்கள். நியாதி.21:21. யெப்தாவின் குமாரத்தி தம்புரு வாசித்து நடனம் ஆடினாள். நியாதி.11:34.

19. ஜென்மநாள் கொண்டாட்டத்திலும் இசைநடனம் விருந்து காணப்பட்டது. இங்கு சாலோமின் இசைக்கும் நடனத்திற்கும் ஏரோது தன் ஜென்மநாள் பந்தியில் தன் மதியை இழந்தான். மத்.14:6-10. பாடலும் இசையும் ஒருவனை தன் மதியை இழக்கச் செய்கிறது.

20. எருசலேமின் அரங்கம் கட்டப்பட்டு, அதன் பிரதிஷ்டை வேளையில் துதிகளினாலும், பாடல்களி னாலும், கைத்தாளம் தம்புரு சுரமண்டலம் முதலான கீதவாத்தியங்களினாலும் மகிழ்ச்சியாக பிரதிஷ்டைக் கொண்டாடப்பட்டது. நெகே.12:27.

21. எசேக்கியா இராஜா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான். அவன் அழுது விண்ணப்பம் பண்ணினபோது கர்த்தர் அவன் நாட்களிலே 15 வருடம் கூட்டிக்கொடுத்தார். அப்பொழுது எசேக்கியா கர்த்தர் என்னை இரட்சித்தார், ஆகையால் எங்கள் ஜீவநாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்திலே என் கீதவாத்தியங் களை வாசித்துப்பாடுவோம் என்றான். ஏசா.38:20. இவ்வாறாக தேவனுக்கு நன்றி செலுத்தும் வேளையிலும் இசையும் பாடலும் இடம்பெற்றன.

22. நேபுகாத்நேச்சார் தான் நிறுத்தின பொற்சிலையை ஜனங்கள் தாழவிழுந்து, அதைப் பணிந்து கொள்ளும் வேளையில் எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான கீதவாத்தியங்களின் சத்தம் தொனிக்கச்செய்தான். தானி.3:1,5,6. ஆக கீதவாத்தியங்கள் சிலைவணக்க நேரத்திலும் உபயோகப்படுத்தப் பட்டது.

23. எசேக்கியா இராஜா காலத்தில் பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தத்துவங்கிய நேரத்தில் கர்த்தரைத் துதிக்கும் கீதமும், பூரிகைகளும், இஸ்ரவேல் இராஜாவாகிய தாவீது ஏற்படுத்தின கீத வாத்தியங்களும் முழங்க சர்வாங்க, தகனபலிகள் செலுத்தப்பட்டன. அவ்வேளையில் சபையோர் எல்லோரும் தேவனைப் பணிந்துகொண்டார்கள். 2நாளா.29:26-30.

24. தாவீது, ஜனங்கள் கர்த்தருக்கு அவருடைய நாமத்துக்குரிய மகிமையைச்செலுத்தி, காணிக்கை களைக் கொண்டுவந்து, அவருடைய சந்நிதியில் பிரவேசித்து, பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளவும், கர்த்தரைத் துதித்து **அவர் நல்லவர் அவருடைய கிருபை என்றுமுள்ளது** என்று அவருடைய பரிசுத்த நாமத்தைப் போற்றித்துதிக்கவும், பூரிகைகளையும், கைத்தாளங்களையும், தேவனை பாடுகிறதற்குரிய கீதவாத்தியங்களையும் தொனிக்கச்செய்தான். 1நாளா.16அதி. 2நாளா.7:1-6. தாவீது கர்த்தரை தம்பூரினாலும், பத்து நரம்பு வீணைகளினாலும் கீர்த்தனம் பண்ணினான். சங்.144:1. கர்த்தருடைய ஆலயத்தில் கீதவாத்தியங்கள் குறித்து 1நாளா.6:31,32; 25:6ல், ஏசா.38:20ல் வாசிக்கி றோம். கர்த்தருடைய ஆலயத்தில் தாளங்கள், தம்புருக்கள், சுரமண்டலங்களாகிய கீதவாத்தியங்கள் வாசிக்கப் பட்டது. சங்கீதத்தலைவன் கீதவித்தைகளை படிப்பித்தான். 1நாளா.15:22. பாடகர்கள் இருந்தார்கள். 1நாளா.15:19. பாடல்கள் பாடுவதற்கென பாடல்குழு இருந்தது. 1நாளா.16:41,42; 2நாளா.7:6; 20:21. லேவியர் பாடகர்களாகவும் 1நாளா.16:4. கீதவாத்தியங்களை வாசிக்கத் தெரிந்தவர்களாயுமிருந்தார்கள். 2நாளா.34:12. ஆண்களும் பெண்களும் சங்கீதக்காரர்களாயும், சங்கீதக் காரிகளாகவும் இருந்தார்கள். பிர.2:8. சங்கீதக்காரர்களுக்கென்று அறைவீடுகள் இருந்தது. எசே.40:44.

25. புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை கீதவாத்தியங்களினால் கர்த்தரைத் துதித்துக்கொண்டாடினார்கள். 2நாளா.30:21.

26. சாலமோன் இராஜாவானபோது நாலாயிரம் லேவியர்கள் கீதவாத்தியங்களினால் கர்த்தரைத் துதித்தார் கள். 1நாளா.23:5.

27. இசை, தீர்க்கதரிசனம் சொல்லுவதற்கான ஒரு சூழ்நிலையையும், மனோபாவத்தையும் உருவாக்க உதவியது. சுரமண்டலக்காரன் வந்து வாசித்தபோது கர்த்தருடைய கரம் எலிசா மேல் இறங்கி, அவன் கர்த்தரு டைய வார்த்தையை உரைத்தான். 2இராஜா.3:11,15,16.

28. துக்ககரமான நிகழ்ச்சிகளிலும் இசைக்காணப்பட்டது. தலைவன் ஒருவன் வீட்டில் அவன் மகள் இறந்து போனதினால் அங்கு தாரை ஊதினார்கள். மத்.9:23.

29. தாவீதின் புதுப்பாட்டில் கீதவாத்தியங்கள் இருந்தன. சங்.144:9, 33:3.

30. வேசியின் வீட்டில் அவள் வீணை எடுத்து இனிதாக வாசித்துப் பாடுகிறாள். ஏசா.23:15,16.

31. வானத்தில் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசைபோன்ற சத்தம் கேட்டது. வெளி.14:2.

32. மேலும் வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. அந்த சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந்தார். அவருடைய வலதுகரத்தில் ஒரு புத்தகம் இருந்தது. அந்தப் புத்தகத்தை ஆட்டுக்குட்டியானவர் வாங்கினபோது நான்கு ஜீவன்களும், இருபத்திநான்கு மூப்பர்களும், தங்கள் தங்கள் சுரமண்டலத்தைப் பிடித்துக் கொண்டு புதுப்பாட்டைப் பாடினார்கள். வெளி.4:2; 5:1,8,10.

33. இவ்வாறாக பாடலும், இசையும் மகிழ்ச்சி நேரத்திலும் தீர்க்கதரிசனம் உரைக்கும் வேளையிலும், ஆராதனை வேளையிலும், துக்க சமயத்திலும், பொதுவாக அனைத்து சம்பவங்களிலும் இடம் பெற்றதாகத்

தெரிகிறது. உலகத்தின் சகல இராஜ்யங்களும், அவைகள் எல்லாவற்றின் மேலுள்ள அதிகாரங்களும், அவைகளின் மகிமையும் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அவன் கீதவாத்தியங்களுக்கு ஆதாரமாக இருந்ததினால் உலகத்தில் இசையைப் பிரவேசிக்கச்செய்தான். அவனுடைய இராஜ்யத்தில் அவன் மக்களை தன் உயிரில்லாத வாத்தியங்களின் இசைகளினால் கவர்ந்து அவர்களை மகிழ்விக்கிறான். ஆனால் இந்த மகிழ்ச்சி சற்று நேரத்திற்கே உள்ளது. இவன் தேவாராதனையில் மக்களை போலியாகப் பரவசப் படுத்துகிறான். ஆனால் அது உண்மையான பக்திப்பரவசமில்லை. மக்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள்.

**<u>இப்பொழுது இங்கு சில முக்கியமான சம்பவங்களில் பாடல்கள் மட்டுமே இருந்ததைக் காணலாம். இங்கு சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்களின் இசை காணப்படவில்லை.</u>**

34. மோசேயின் பாட்டு. மோசே இஸ்ரவேல் புத்திரருடன் தன் வெற்றியின் களிப்பில் கர்த்தரைப் புகழ்ந்து பாடினான். இங்கு இசை இடம்பெறவில்லை. யாத். 15:1-19.

35. இரட்சண்ய பாடலில் இசை இடம் பெற்றதாகத் தெரியவில்லை. சங்.32:7.

36. சீயோன் குமாரத்தியே கெம்பீரித்துப் பாடு : இஸ்ரவேலை ஆர்ப்பரியுங்கள் : எருசலேம் குமாரத்தியே, நீ முழு இருதயத்தோடும் மகிழ்ந்து களிகூரு. இஸ்ரவேலின் இராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்; இனித் தீங்கை காணாதிருப்பாய். அந்நாளிலே உன் நடுவிலே சிறுமையும் எளிமையுமான ஜனத்தை மீதியாகக் கர்த்தர் வைப்பார். அந்நாளின் மகிழ்ச்சியில் அங்கு இசை காணப்படவில்லை. செப்.3அதி.

37. தெபொராளும், பாராக்கும் தங்கள் வெற்றியைப் பாடிக்கொண்டாடினார்கள். இவர்கள் பாடலில் வாத்தியக்கருவிகளின் இசை இடம்பெறவில்லை. நியாதி.5அதி.

38. பேயோரில் இஸ்ரவேல் கிணற்றைத் தோண்டுகையில் **ஊற்றுத் தண்ணீரே, பொங்கி வா** என எண்.21:17,18. இசையில்லாமல் பாடினார்கள். ஆனால் நம்முடையவர்கள் இந்தப்பாடலை உயிரில்லாத வாத்தியக்கருவிகளின் இசையோடு பாடி மகிழ்கிறார்கள்.

39. ஸ்தோத்திரப் பாடலில் இசை இடம்பெறவில்லை. மத்.26:30; அப்.16:25; எபி.2:12.

40. **எல்லாவற்றிற்கும் மேலாக இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால், அதாவது தேவனுடைய சுய இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்கள் பாடின புதிய பாடலில் வாத்தியக் கருவிகளின் இசை இல்லவே இல்லை. வெளி.5:9. பாருங்கள், தேவனுடைய சுய இரத்தத்தினால் மீட்கப்பட்ட நாம் ஆவியாகிய தேவனை ஆவியோடும் கருத்தோடும் பாடித்துதித்து, ஆவியோடும் உண்மையோடும் தொழுதுசேவிப்போம். இதுதான் உண்மைக் கிறிஸ்தவனின் ஆராதனை அனுபவம்.**

41. பொதுவாக இந்நாட்களில் தேவனைத் துதிப்பதிலும், ஆராதிப்பதிலும் பாடலும் இசையும் இன்றியமையாததாகி விட்டது. பாருங்கள், தேவனைத் துதிக்க இரு முறைமைகள் உண்டு. ஒன்று பாரம்பரிய வழிபாடு. இது அநேக ஆசார முறைமைகளையும், சடங்குகளையும், ஜெப ஆலய ஆராதனை முறைமை களையும் கொண்டது. இது ஆதி யூத ஆராதனை முறைமை. மாம்சத்துக்குரிய இஸ்ரவேலரின் ஆராதனை முறைமை. இங்கு அழகான ஆலயங்கள் உண்டு. மெல்லிய வெண்வஸ்திரம், அங்கிகள் அணிந்த லேவியர், ஆசாரியர் உண்டு. இங்கு பாடல்கள் ஆராதனையைச் சிறப்பிக்கிறது. பாடல்கள் இசையுடன் காணப்பட்டு, ஜனங்கள் வசீகரிக்கப்பட்டு, அவர்களை ஆராதனையில் உற்சாகமாக பங்குகொள்ளச்செய்கிறது. ஆண்களும், பெண்களும் இரு வகுப்பாகப்பிரிக்கப்பட்டு மாறிமாறிப் பாடும் வழக்கம் இருந்தது, இன்றும் அது இருக்கிறது. எஸ்.2:65; நேகே.12:24. இது மாம்சத்துக்குரிய இஸ்ரவேலரின் தேவாராதனை முறைமையாகும்.

42. அடுத்தமுறை ஆவியோடும் உண்மையோடும் தேவனைத் தொழுதுகொள்வதாகும். மாம்சத்துக்குரிய இஸ்ரவேலர் பிதாவை எருசலேமிலிருக்கிற பரிசுத்தப் பர்வதத்திலேயும், ஸ்தலத்திலேயும் தொழுதுகொண்டு வந்தார்கள். ஏசா.27:13. இப்பொழுது நாம் தேவனை எங்கும் தொழுதுகொள்ளும் காலத்தில் இருக்கிறோம். தேவன் ஆவியாயிருக்கிறார். ஆதலால் அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும் என்று இயேசு கூறினார். யோ.4:20. இது ஆவிக்குரிய இஸ்ரவேலரின் ஆராதனை முறைமை. இங்கு நாம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து பயத்தோடும் பக்தியோடும் தேவனை ஆராதிக்க வேண்டும். எபி.12:28. பரிசுத்தமில்லாது ஒருவனும் தேவனை தரிசிக்க முடியாது. ஆதலால் பரிசுத்த அலங்காரத்தோடே வந்து தேவனை ஆராதிக்கவேண்டும். 1நாளா.16:29; சங்.96:9. அதாவது ஒருவன் தன் முழு இருதயத்தோடும், தன் முழு ஆத்துமாவோடும், தன் முழு மனதோடும், தன் முழு பயத்தோடும் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவரை ஆராதிக்கவேண்டும். உபா.11:13; 4:9; மாற். 12:30. பாருங்கள், தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான். சங்.51:17. இந்த ஆராதனைக் குறித்து இயேசு, நியாய சாஸ்திரியிடம் **அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய்** என்றார். லூக்.10:28. நாம் ஆவியிலே ஆவியாகிய தேவனுக்கு ஆராதனை செய்யவேண்டும். பிலி.3:3. உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார். அப்.7:48. உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கிய தேவனானவர் வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளால்

கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. அப்.17:24. இன்று நாமே தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம். ஏனென்றால் தேவனுடைய ஆவி நம்மில் வாசம் பண்ணுகிறார். 1கொரி.3:16. நாமே தேவன் வாசம் செய்யும் ஆலயம். 1கொரி.3:17.

43. சபைக்கால தொடக்கத்தில் ஆராதனை வேளையில் கர்த்தரைத் துதிக்கும்போது ஜனங்கள் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்த பாடல்களை மற்றும் சங்கீதங்களை இசையின்றி ஆவியின் நிறைவோடு பாடினார்கள். ஆனால் இந்நாட்களில் ஆராதனை வேளையில் மக்களைப் பரவசப்படுத்த பாடல்களுடன் இசையும் இணைக்கப்படுகிறது. பாடல் இசையுடன் கலந்து அதினால் ஏற்படும் பரவசம் உண்மையான பக்திப்பரவசம் இல்லை. இசை சற்று நேரத்திற்கு மட்டுமே மகிழ்ச்சியற்ற மனதை மாற்றக்கூடியது. மேலும் கீதவாத்தியத்தின் இசைக்கு இணைந்து ஆடியும் பாடியும் உடம்பை வளைத்துக்கொடுத்து நடனம் ஆடுவதும் உண்மையான பக்திப்பரவசம் இல்லை. அது உணர்ச்சிவசப்படுதல் ஆகும்.

44. கன்னியாகுமரி மாவட்டத்தில் கருங்கல் சமீபத்தில் ஒரு சபைக்கு ஞாயிறு ஆராதனையில் செய்தி கொடுக்க அழைக்கப்பட்டுச் சென்றேன். ஆராதனைக்கு முதல் ஆளாக நான்தான் அங்கு போய்ச்சேர்ந்தேன். எனக்குப் பின்தான் சபையார் ஒவ்வொருவராக வர ஆரம்பித்தனர். ஆராதனைக்கு வந்தவர்கள், வந்தவுடன் முழங்கால்படியிட்டு சிலர் மௌனமாக, சிலர் தங்கள் உதடுகள் அசைய ஜெபித்து அமர்ந்தனர். பின் பாஸ்டரின் துணைவியார் வந்தார்கள். அவர்கள் மேளம் கொட்ட ஆரம்பித்தார்கள். பாடல்கள் பாடினர். பின் பாஸ்டர் அவர்கள் வந்து மேளத்தைப் பெற்றுக்கொண்டு, கொட்ட ஆரம்பித்தார்கள். பாஸ்டர் தன் துணைவியாரைவிட சற்று உற்சாகமாகவே மேளம் கொட்டினார். சபையாரும் உற்சாகமாகப் பாடினார்கள். முடிவில் **கால் மிதிக்கும் தேசமெல்லாம் என் கர்த்தருக்குச் சொந்தமாகும்** என்ற பாடலைப்பாட ஆரம்பித்து பாஸ்டர் மிக வேகமாக மேளம் கொட்ட விசுவாசிகள் மத்தியில் ஒரே கூச்சல், துள்ளிக்குதித்தல், வேகமாக கைக்கொட்டி பரவசம் அடைந்தனர். இதில் எனக்கு ஒருமனப்பாடு கிடைக்கவேயில்லை. நான் என் பிரசங்கவேளையில் இந்தச்செயல் விசுவாசிகள் பரிசுத்த ஆவியினால் பெற்ற அபிஷேகத்தின் நிறைவு அல்ல. மாறாக இது வேகமாக மேளம் கொட்டினதினால் உண்டான உணர்ச்சி வசப்படுதல் எனக் கடிந்துகொண்டேன். சபையில் முறுமுறுப்பு ஏற்பட்டது. அதன் பலன் என்ன? எனக்குக் கொடுத்த முதல் அழைப்புக் கடைசி அழைப்பாக இருந்தது. பெந்தெகொஸ்தே சபைகளின் பரவசமே இந்த உணர்ச்சிவசப்படுதல் தான். நான் செல்லும் இடங்களில் தவறுகளைக் கண்டு என்னால் மௌனமாக இருக்கமுடியாது. தவறைக் கடிந்துகொண்டு சத்தியத்தைக் கூறுவதினால் அநேகமாக செல்லும் இடங்களில் சத்துருவாகிவிடுகிறேன்.

45. **என் பெந்தெகொஸ்தே சகோதரர் தங்களுக்கு வேகமான இசை, மேளம் கொட்டுதல், கைகளைத்தட்டுதல், அல்லது கஞ்சிரா அடித்தல், சத்தமிடுதல் போன்றவை இருக்கவேண்டுமென்ற நிலை அடைந்துள்ளனர். இது உணர்ச்சி வசப்படுதல். (கல்வாரியில் அந்தநாள், பக்கம் 28).**

46. **தேவனுக்கு அது ஒரு உண்மையான துதியாயிருக்குமென்றால் அவர்கள் சீட்டி அடிக்கமாட்டார்கள்... அது ஆவியானவர் கற்பிக்கும் துதியானால், அவர்கள் டோல் அடிக்கும்போது துள்ளமாட்டார்கள். உண்மையான துதி ஆவியினால் உண்டாயிருக்கிறது. (இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று. பக்கம் 31, பத்தி 137) இந்த தமிழ் மொழிபெயர்ப்பு அநேக முறை நான் சுட்டிக்காட்டி வருவதுபோன்று இங்கு சரியில்லை. இதை ஆங்கிலத்தில் படியுங்கள். If it's a real praise of God, there is not enough whistles and enough the power in the world to stop it ! when it really comes from God, it doesn't take music to be beat up : it takes the Spirit of God to comedown : that does it (This day this scripture is fulfilled, Page 20, Para 5).**

47. பொதுவாக ஜனங்கள், இனிய குரலும், கீதவாத்தியம் வாசிப்பதில் சாமர்த்தியமுள்ளவர்கள் பாடும் இன்பமான பாடல்களைக் கேட்கிறார்கள். உணர்ச்சிவசப்படுகிறார்கள். பரவசப்படுகிறார்கள். ஆனால் அந்தப்பாடல் வாயிலாக கேட்ட வார்த்தையின்படி மட்டும் செய்வதில்லை. எசே.33:32ஐ தியானியுங்கள். ஒரு சில தேவனுடைய வார்த்தைகளையுடைய இனிய பாடலும் இசையும் அவனுக்கு சற்று நேரம் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. பின் அந்த மகிழ்ச்சி அவனில் நிலைத்திருக்காமல் அவனை விட்டு நீங்கிவிடுகிறது. லூக்.8:12.

48. **ஓ ! உண்மையான முன்குறிக்கப்பட்ட அனு, முன்குறிக்கப்பட்டவர்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்கட்டும். அது இன்பமான இசையாக அவனுக்கு இருக்கட்டும். அது சத்தியம் என்று அவனுக்குத் தெரியும். (கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு, பக்கம் 54, பத்தி 1). பாருங்கள் ஆவிக்குரியவனுக்கு தேவனுடைய வார்த்தையே இன்பமான, இனிமையான இசை. வாத்தியக்கருவிகளின் இசை சாத்தானுடையது என்பது அவர்களுக்கு நன்றாகத்தெரியும் ஆதலால் ஆவிக்குரியவர்கள் உயிரில்லாத வாத்தியக்கருவிகளின் இசையில் மதிமயங்க மாட்டார்கள். இசை மக்களின் உணர்ச்சியை தூண்டி அவர்களைப் பரவசப்படுத்துகிறது. ஆவியோடும் உண்மையோடும் தேவனைத் தொழுதுகொள்ளவேண்டிய ஆராதனையில் இந்தப்பரவசம் தேவை இல்லை. வாருங்கள் நாம் சபையில் தேவனைக் குறித்து ஆவியோடும் கருத்தோடும் பாடுவோம். நம்முடைய துதி, ஸ்தோத்திரங்கள், பாடல்கள் யாவும் ஆவியோடும் கருத்தோடும் இருக்கட்டும். இருதயத்திலே பக்தியுடன் இருக்கட்டும். மேலும் நாம் தேவ சமுகத்தில் ஆவியோடும் கருத்தோடும் நமது விண்ணப்பங்களையும் ஏறெடுப்போம். 1கொரி.14:15 ; கொலோ.3:16.**

49. தேவன் கலையில் இருக்கிறார். தேவன் இசையில் இருக்கிறார்... தேவன் நடனத்திலும் இருக்கிறார்... இப்பொழுது இங்கு நடைபெறுவது நடனங்களில்லை. ஆனால் தேவனுடைய குமாரரும், குமாரத்திகளும் பரிசுத்த ஆவியினால் நிறையப்படும்போது பாருங்கள், அதுவே உண்மையான நடனம். (சிறந்த வேலைப்பாடு, பத்தி 32) .

50. யூதாஸ் ஸ்காரியோத் நீதிமானாக்கப்பட்டவன். பரிசுத்தமாக்கப்பட்டவன். ஆனால் அவன் பரிசுத்த ஆவியைப்பெறவில்லை. இரு கட்டத்துக்குள் வந்தான், மூன்றாவது கட்டத்துக்கு வரவில்லை. பரிசுத்த ஆவியைப் பெறாவிட்டாலும் அவன் அப்போஸ்தலர்களில் ஒருவனாயிருந்து இயேசுவை முப்பது வெள்ளிக்காசுக்காகக் காட்டிக்கொடுத்தான். அதாவது இயேசு கிறிஸ்துவை முப்பது வெள்ளிக்காசுக்கு விற்றான். ஏனென்றால் அவன் ஒரு பணப்பிரியனாக இருந்தான். அவனைப் போன்று, இன்று அநேக கிறிஸ்தவர்கள் பணப்பிரியராயிருக்கிறார்கள். அவ்வண்ணமாகவே நம் மத்தியில் அநேகர் கர்த்தர் கிருபையாய்க் கொடுத்த இனிமையாகப்பாடும் தாலந்து களினால், இனிய குரல்களினால் இன்பமாக கர்த்தரைப் போற்றித் துதித்து, பாடல்களைப்பாடி, அவைகளை கேசட்களில் பதிவுசெய்து நல்ல விலைக்கு விற்று பணம் சம்பாதிக்கிறார்கள். இதுவும் இயேசு கிறிஸ்துவை விலைக்கு விற்பதாகும். பாருங்கள் பொதுவாக ஒரு கேசட் விலை ரூ.15/-, 20/- ஆகும். இதில் பாடல்களைப் பதிவுசெய்து ரூ.30/-, 45/- வரை விற்று நல்ல ஆதாயத்தில் பணம் சம்பாதிக்கிறார்கள். இங்கு யூதாஸ் ஆவியே கிரியை செய்கிறது. மேலும் விலை ரூ.45/- எனப் போடாமல் காணிக்கை ரூ.45/- எனப்போட்டு மக்களை ஏமாற்றுகிறார்கள். இந்தத் தொழிலினால் இவர்களுக்கு நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிறது. இந்த வியாபாரம் யார் பெயரில் நடக்கிறது? கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில். ஆதலால் இவர்களுக்கும், அப்போஸ்தலனாகிய யூதாஸ்க்கும், தீர்க்கதரிசியாகிய பிலேயாமுக்கும், தேவனுடைய மனுஷனாகிய எலிசாவின் வேலைக்காரன் கேயாசிக்கும் எந்த விதமான வித்தியாசமுமில்லை. எல்லாம் ஒரே குட்டையில் ஊறின மட்டைகள்தான்.

51. இவர்கள் கிறிஸ்துவைக் குறித்து பாடும் பாடல்களில் மன உருக்கம் உண்டு, கண்ணீர் உண்டு, பக்திப்பரவசம் உண்டு. இதெல்லாம் என்ன? வெறும் வெளிவேஷம் மட்டுமே. இந்த வெளிவேஷம் எதற்காக? தாங்கள் போடும் கேசட் நல்ல விற்பனையாகி அதன்மூலம் நல்ல வருமானம் தங்களுக்கு கிடைக்கவேண்டு மென்ற உள்நோக்கமேயன்றி கிறிஸ்துவுக்காக செய்யும் பணியல்ல. இவர்களின் மன உருக்கம், பக்திப்பரவசம் எல்லாம் உள்ளத்தின் ஆழத்திலிருந்தா? இல்லவேயில்லை. இவர்கள் மன உருக்கத்திற்கும் பக்திப்பரவசத் திற்கும் ஒரு சினிமா நடிகனுடைய நடிப்பில் உள்ள மன உருக்கத்திற்கும், பக்திப்பரவசத்திற்கும் வித்தியாசமே இல்லை. இருவரும் பணத்திற்காகவே நடிக்கிறார்கள், பாடுகிறார்கள். உண்மையாகவே இவர்கள் கிறிஸ்துவின் நாம மகிமைக்காக பாடுவார்களானால், லாப நஷ்டம் எதுவும் இல்லாது கேசட் போட ஆகும் செலவுக்கு விற்பனை செய்யலாமே. கிறிஸ்துவின் பெயரில் விற்பனை செய்வது கிறிஸ்துவை விற்பனை செய்வதாகும். இது என்ன? யூதாஸ் ஆவி.

52. தாவீதின் சங்கீதங்களெல்லாம் பாடல்கள்தான். ஆனால் அவைகள் யாவும் தேவஆவியினால் அருளப்பட்டது, பாடப்பட்டது. பாருங்கள் அந்தப் பாடல்களில் தீர்க்கதரிசனங்கள் உண்டு. இயேசு கிறிஸ்துவை குறித்து மட்டும் சுமார் 186 மேற்கோள்கள் புதிய ஏற்பாட்டில் சங்கீதத்திலிருந்து இடம்பெற்றுள்ளது. இயேசு தம்முடைய சீஷர்களிடம் சங்கீதங்களில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகள் நிறைவேறவேண்டிய தாயிருக்கிறது எனக் கூறினார். லூக்.24:44. வேதநாயகம் பாகவதர் **வாரும் ஐயா, போதகரே, வந்தெம்மிடம் தங்கியிரும் ; சேரும் ஐயா பந்தியினில், சிறியவராம் எங்களிடம். ஒளி மங்கி இருளாச்சே, உத்தமனே, வாரும் ஐயா ! கழித்திரவு காத்திருப்போம், காதலனே, கருணை செய்வாய். நான் இருப்பேன், நடுவில் என்றாய், நாயன் உன் நாமம் நமஸ்கரிக்க, நாமதமேன் தயைபுரிய தற்பரனே, நலம் தருவாய்** என்று தன்னுடைய ஏழ்மை நிலையில், பசி பட்டினி வேளையில் பக்தியுடன் பாட, அங்கு நடந்த அற்புதங்கள் உங்களுக்குத்தெரியும். காவலில் வைக்கப்பட்டிருந்த பவுலும் சீலாவும் நடு ராத்திரியிலே ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள். அங்கு அற்புதங்கள் நடந்தது. அப்.16:23-34. பரிசுத்தவான்கள் தங்கள் மகிழ்ச்சி வேளையிலும், இக்கட்டான நேரத்திலும் தேவனைத் துதித்துப்பாட அங்கு அற்புதங்கள் நடந்தது. இவர்களுடைய நாவு ஆனந்த சத்தத்தினால் நிறைந்திருந்தது. கர்த்தர் இவர்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்தார். சங்.126:2,3. இப்பொழுது தாவீதினுடைய சங்கீதப்பாடல்களுக்கும், வேதநாயகம் பாகவதருடைய பாடல்களுக்கும், பவுல் சீலாவின் பாடல்களுக்கும், நம்முடையவர்களின் பாடல்களுக்கும் உள்ள வித்தியாசங்களை நீங்கள் அறிந்து கொள்ளலாம். நம்முடையவர்களின் பாடல்களில் ஆவிக்குரியவைகள் எதுவும் கிடையாது. ஏனென்றால் இவைகள் தேவஆவியினால் அருளப்படாமல், யூதாஸ் ஆவியினால் பணம் சம்பாதிப்பதற்காகவே அருளப்பட்டது, எழுதப்பட்டது, இசையுடன் பாடப்பட்டது. கிறிஸ்தவ பாடகர்கள் பாடல்கள் பாடி, அதை கேசட்களில் பதிவு செய்து, விற்பனை செய்வது இந்நாட்களில் ஒரு தொழிலாகிவிட்டது.

53. புதிய ஏற்பாடு சபை ஆராதனை முறைமை உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்தது. மாம்சத்துக்குரிய ஆராதனை முறைமை, அதாவது பாரம்பரிய வழிபாடு முறைமை ஆக்கினைக்குள்ளாக்கத் தீர்க்கப்பட்டாயிற்று. ரோ.8:3. இங்கு சங்கீதங்களாலும், ஞானப்பாட்டுகளாலும், கீர்த்தனைகளாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக்கொண்டு, இருதயத்தில் கர்த்தரை பக்தியுடன் பாடி, பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிப்பதாகும்.

கொலோ. 3 : 16,17. இங்கு கர்த்தருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப்பலியை கர்த்தர் மூலமாய் எப்பொழுதும் தேவனுக்குச் செலுத்துவதாகும். எபி. 13 : 15. இந்த ஆராதனைக்கு இசைத் தேவையில்லை. தேவனுடையஆவி தான் தேவை. இங்கு ஆவியோடும் கருத்தோடும் பாடி, ஆவியினாலே ஸ்தோத்திரம் பண்ணி, ஆவியோடும் கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவதாகும். 1கொரி. 14:14-16. ஆவிக்குரிய ஆராதனையில் கீதவாத்தியங்கள் எங்கும் இடம்பெற்றதாக வேதவாக்கியங்களில் காணமுடியவில்லை.

54. தரித்திரருக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டபோதும் சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்கள் உபயோகிக்கப்பட்டதாக தெரியவில்லை. ஆனால் இந்நாட்களில் அவைகள் இல்லாமல் சுவிசேஷ ஊழியமே இல்லை என்ற நிலையில் நாம் இருக்கிறோம். இது சபையின் பரிதாபமான நிலையைக் காட்டுகிறது. இசைப்பாடல்களைக் கேட்டு ஒருவன் பரவசம் அடையலாம். ஆனால் அது அவனை மனம் மாற்றமடையச் செய்யாது. இசையுடன் கூடிய சுவிசேஷப்பாடல்கள் யாவும் வெறும் வேஷமே, போலியே. இது ஆத்தும இரட்சிப்புக்கு உதவாது. கர்த்தருடைய வசனமே நம்மை மறுபடியும் பிறக்கச்செய்கிறது. 1பேது.1:22,23; யாக்.1:21.

55. அப்போஸ்தலர்கள் காலத்தில் பலர் ஒருமனப்பட்டு, ஒருங்கே ஒரு விசுவாசியின் வீட்டில் சபை கூடி தேவனை ஆராதித்து வந்தார்கள். பில. 2; கொலோ. 4:15. ஒவ்வொரு சபையும் சுயாதீனமாக இயங்கி வந்தது. சபை கூடுதலுக்கு இவர்கள் கட்டிடங்கள் கட்டியதாக எங்கும் ஆதாரங்கள் இல்லை. இங்கு பாடல்கள் ஜெபத் தோடு மிக்க நெருங்கிய தொடர்புள்ளதாக இருந்தது. பவுலும் ஜெபம் பண்ணி பாடல்களினால் தேவனைத் துதித்தான். அப்.16:25; எபே.5:19; கொலோ.3:16. சீஷர்கள் ஒன்றாக ஸ்தோத்திரப்பாடலைப் பாடினார்கள். மத்.20:30; மாற்.16:26. இங்கு இசை எங்கும் காணப்படவில்லை.

56. **நாம் சபைக்குச் செல்வது இசை இசைத்துப் பாடல்கள் பாடுவதற்கென்று இல்லை. சபை என்பது சீர்திருத்தும் இடம். பாருங்கள், நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் தொடங்குகிறது. (கல்வாரியில் அந்த நாள், பக்கம் 28).**

57. **நீங்கள் ஒருமனப்பட்டு, ஒருங்கே ஒன்றுகூடும் இடம் ஜீவனுள்ள தேவனுடைய சபையின் ஒரு பாகமாக இருக்கட்டும். இங்கு நாம் தேவனுடையஆவியை உணரவேண்டும். நாம் சபைகூடும் இடம் பரிசுத்த ஆவி நம்மை சந்திக்கும் இடமாக இருக்கட்டும். அங்கு நாம் ஒருவரோடொருவர் ஐக்கியம் கொள்ளவரவில்லை. மாறாக கிறிஸ்துவுடன் ஐக்கியம் கொள்ள அங்கு வருகின்றோம். அதிகமாக பாடல்களைப் பாடுவது, அதிகமாகக் கூச்சலிடுவது, அதிகமாக பாஷைகள் பேசுவது ஜீவனுள்ள தேவனுடைய சபையின் ஒரு பாகம் எனக் கூறமுடியாது. உண்மையான தேவனுடைய சபையில் இயங்கும் ஆவியின் தரமே முக்கியம். அதன் தொடக்கம், முடிவு பரிசுத்த ஆவியை ஆதாரமாகக் கொண்டு காணப்படவேண்டும்.**

58. **யோசுவா என்னசெய்தான் என்பதைக்கவனியுங்கள். அவன் யாரை முன்வைத்தான்? ஆசாரியர் களையா? லேவியர்களையா? பாடல்கள் பாடும் பாடல் குழுவினர்களையா? வாத்தியக்கருவிகள் வாசிக்கும் இசைக்கலைஞர்களையா? இல்லை ஐயா, இல்லை. அவன் வார்த்தைக்கு முதல் இடம் கொடுத்தான். அவன் உடன்படிக்கைப் பெட்டியைத் தூக்கிச் செல்லுங்கள் ! ஆசாரியர்களே, அதினின்று விலகியிருங்கள். அதற்குப் பின்னால் வாருங்கள். அதை நடத்திச்செல்ல நீங்கள் முயற்சிக்காதீர்கள், அது உங்களை நடத்திச் செல்லட்டும் என்றான். இன்றைய தேவையும் அதுவே. நாம் வார்த்தையைக்கடந்து அதற்கு முன்னே செல்ல முனைந்து, வார்த்தையை இதில் பொருத்த, அதில் பொருத்தப் பண்ணுகிறோம். இன்றைய நமது தேவை வார்த்தையை பின்பற்றுவதே. உடன்படிக்கைப் பெட்டி புறப்பட்டுச் சென்றபோது, அதைப்பின் தொடர்ந்தது எது? பாடல்கள் பாடுவோர். இசைக்கருவிகளை வாசிப்போர் - யுத்தம் நடப்பதற்கு முன்பு. இன்றைய நமது தேவையும் அதுவே. பாடகர்கள் இசைக்கருவிகளை இசைத்து ஆர்ப்பரிப்பது எல்லாம் பிறகு இருக்கட்டும். வாருங்கள், நாம் எதிலும் வார்த்தையை முதலில் வைப்போம். வார்த்தையில் நிலைத்திருப்போம்.**

59. **நாம் வியாபாரத்தில் பெரும் வெற்றியை அடைந்திருக்லாம், பிரபலமான சபையில் பெரிய பதவிகளை வைத்திருக்கலாம், நாம் அனைத்துத் துறைகளிலும் வெற்றியைக் கண்டவர்களாக இருக்கலாம், ஆனால் ஆவிக்குரிய ஆராதனை முறைமையில் சரியானவழியை பின்பற்றாவிட்டால், அந்த ஆராதனை வீணாகும். பாருங்கள், இஸ்ரவேலருக்கு தேவனைப்பற்றி வைராக்கியம் இருந்தது. ஆனாலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியம் அல்ல. ரோ.10:2. எதுவும் தேவனுடைய வார்த்தையின்படி அமைந்திருக்கவேண்டும், இல்லை என்றால் அது வீணாயிருக்கும். காயீன், பரிசேயர் இருவரும் தேவனை ஆராதித்தார்கள். ஆபேலும் ஆராதித்தான். காயீன், பரிசேயர் ஆராதனை அங்கீகரிக்கப்படவில்லை. ஏனென்றால் அவர்கள் தேவனுடைய வார்த்தையின்படி அவரை ஆராதிக்கவில்லை. ஆபேல் வார்த்தையின்படி ஆராதித்தான். ஆதலால் அவன் ஆராதனை அங்கீகரிக்கப்பட்டது.**

60. உங்களுடைய பிரயோஜனத்திற்காக ஆவிக்குரிய சபையின் ஆராதனை எப்படியிருக்கவேண்டும் என்று தீர்க்கதரிசியின் செய்திகளிலிருந்து எடுத்துக்கூற விரும்புகிறேன். முதலாவது நம்முடைய சபை ஜீவனுள்ள தேவனுடைய சபையின் ஒரு பாகமாக இருக்க வேண்டும். சபை பாகுபாடற்ற கூடாரமாக இருக்க வேண்டும்.

1. தேவனுடைய வீட்டில் சபை ஆராதனை ஆரம்பிக்கும் முன் நாம் சிறிது நேரம் ஆவிக்குரியப் பாடல்களை ஒலிக்கச் செய்யலாம்.

2. ஆராதனை மணி ஓசை ஒலிக்கலாம்.

3. நாம் ஆவியாகிய தேவனை ஆவியோடும், உண்மையோடும், பரிசுத்த அலங்காரத்துடனே தொழுதுகொள்ளவேண்டும். நமது பயபக்தி உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஊற்றுத் தண்ணீரைப் போல் ஊற்றெடுக்கவேண்டும். மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்து, ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதி முன் வாருங்கள் (**come before His presence with singing** ). சங். 100 : 2.

4. ஒரு பாடல் மட்டும் சபையார் எழுந்துநின்று பாடுங்கள். 2நாளா.7:6. மேய்ப்பன் பாடல்களை நடத்தக்கூடாது. பாடல்குழு தலைவன் பாடல்களை நடத்தலாம். நாம் சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்களின் இசையின்றி ஆவியோடும் கருத்தோடும் பாடவேண்டும். 1கொரி.14:15.

5. முன் அறிவிக்கப்பட்டவர் வந்து சபையை ஜெபத்தில் வழிநடத்தலாம். ஜெபம் எப்பொழுதும் சுருக்கமாக இருக்கவேண்டும். பிர.5:2. நீங்கள் ஜெபம் பண்ணும்போது, அஞ்ஞானிகளைப் போல் வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள். மத்.6:7-8. மாயக்காரனைப் போல் இருக்க வேண்டாம். மத்.6:5, பரிசேயனைப்போல் ஜெபிக்கவேண்டாம். ஆயக்காரனை மாதிரியாகக் கொண்டு ஜெபிப்போம். லூக்.18:9-14. அன்னாளைப் போன்று இருதயத்தை தேவனிடத்தில் ஊற்றிவிடுவோம். 1சாமு.1:15. எலியாவைப் போன்று கருத்தாய் ஜெபம் பண்ணுவோம். யாக்.5:17. ஜெபத்தில் முதலாவது துதி இருக்கட்டும். பின் விண்ணப்பம், மன்றாடுதல் இருக்கட்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபியுங்கள். யோ.14:13,14; 16:25,26. நமது ஜெபம் ஆவியோடும் கருத்தோடும் இருக்கவேண்டும். 1கொரி.14:15. ஜெபவேளையில் சபையார் யாவரும் முழங்காற்படியிட்டு ஜெபிப்பது நல்லது. எஸ்.9:5, அப்.9:40, 21:5. ஜெபவேளையில் சபையார் எழுந்து நிற்பதில் தவறு இல்லை, ஆனால் உட்கார்ந்து கொண்டு ஜெபம்பண்ணுவது கர்த்தரை அவமதிப்பதாகும்.

6. ஜெபவேளைக்குப்பின் ஒரு பாடல். இந்தவேளையில் ஜனங்கள் தங்கள் காணிக்கைகளை காணிக்கைப் பெட்டியிலே சென்று போடலாம்.

7. பாடல் முடிவு வேளையில் மேய்ப்பன் செய்திக்காக பிரசங்கபீடத்துக்கு வரலாம். மேய்ப்பன் கிறிஸ்துவின் சரீரத்துக்கு ஊழியத்தைப் பெற்றவன். அதாவது அவனுடைய ஊழியம் கிறிஸ்துவினிடமிருந்து பெற்று சபைக்கு அளிக்கும் ஊழியமாக இருக்கவேண்டும். வார்த்தையின் பேரில் சவால் வரும்போது பின் வாங்குகிறவன் உண்மையான ஊழியக்காரன் அல்ல.

8. தேவனுடைய வார்த்தைக்கு மரியாதை செலுத்தும் வகையில் பிரசங்க வசனங்களை வாசிக்கும் போது அனைவரும் எழுந்து நிற்க நெகே.9:3, மேய்ப்பனே பிரசங்கம் செய்ய எடுத்துள்ள வேதவசனங்களை வாசிப்பது நல்லது. பிரசங்கம் சுமார் 45 நிமிடங்கள் இருந்தால் போதும். மிக்க நீண்டநேர பிரசங்கமாக ஆராதனை வேளையில் இருக்கக்கூடாது. விசேஷமாக யாராவது அழைக்கப்பட்டிருந்தால், அவர் ஒரு முக்கிமான செய்தியோடு சபைக்கு வருவதால் அதிகநேரம் எடுப்பதில் தவறு எதுவும் இல்லை.

9. செய்தி முடிந்தவுடன் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு அழைப்புக் கொடுத்து அவர்களுக்கு ஜெபிக்கலாம்.

10. இதன்பின் ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுக்கிறவர்களுக்கு அழைப்புக்கொடுத்து அவர்களுக்கும் ஜெபிக்கலாம்.

11. மூன்றாவதாக பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு அழைப்புக் கொடுத்து ஜெபிக்கலாம். அப். 8 : 16 , 17.

12. கடைசியாக வியாதியஸ்தர்களுக்காக கர்த்தருடைய நாமத்தினாலே எண்ணெய் பூசி ஜெபிக்கலாம். யாக். 5 : 14.

மேற்கூறியவர்களுக்கு (9-12) மேய்ப்பன், விசேஷமாக அழைக்கப்பட்ட ஊழியர் இருந்தால் அவர், மூப்பர் ஆக இரண்டு மூன்றுபேர் ஜனங்கள்மேல் கைகளை வைத்து ஜெபிக்கலாம்.

13. ஆராதனை முடிவாக சபையார் அனைவரும் எழுந்து நிற்க மேய்ப்பனுடைய ஆசீர்வாதஜெபம், எண். 6 : 23 - 26; 2கொரி. 13 : 14.

14. ஒன்றரை முதல் ஒன்றேமுக்கால் மணி நேரத்தில் ஆராதனை முடிந்துவிட சபை கலைந்து செல்கிறது.

61. சபையில் ஆவிக்குரிய பாகம் மட்டும்தான் மேய்ப்பனுக்குரியது, மற்றபடி அனைத்து சபை ஒழுங்குகளும் இதர ஊழியர்களாகிய மூப்பர்கள், டீக்கன்கள், தர்மகர்த்தாக்களுக்குரியதாகும். ஆனால் இந்நாட்களில் சபை மேய்ப்பனே எல்லாவற்றிலும் எல்லாம் (all in all) என்ற நிலை உள்ளது. இது பிசாசின் ஆதிக்க குணம். ஒரு மேய்ப்பன் சத்தியத்தை அறிந்தும், அதை அவன் மீறி நடந்தால் அவன்மீது தங்கியிருப்பது தேவனுடைய ஆவி அல்ல, அவன் தேவனால் ஏற்படுத்தப்பட்டவனும் அல்ல.

62. **முடிவாக, சபை தொடக்கக்காலத்தில் அப்போஸ்தலர்களின் ஊழியங்களில் இசைக்கருவிகள் எங்கும் உபயோகத்தில் இல்லை. அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் மாதிரியின்படியே, மூல உபதேசங்களின்படியே நாம் அவர்களை பின்பற்றுகிறவர்களாக இருப்போம். சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியக்கருவிகளின் இனிய இசை நமது உணர்ச்சியை மட்டும் தூண்டக்கூடியது. உள்ளத்தைப் பரவசப்படுத்தக்கூடியது. ஆனால் அது வீண் மாயை. ஆதலால் உண்மையாய்த் தேவனைத் தொழுதுகொள்கிறவர்கள், பிதாவை ஆவியோடும் கருத்தோடும் பாடி, ஸ்தோத்தரித்து, ஆவியோடும் உண்மையோடும் பரிசுத்த அலங்காரத்துடனே தொழுதுகொள்ளவேண்டும். ஆவியில் பாடுகிறவனுக்கு இசை எதற்கு? ஆவிக்குரியவனை பரவசப்படுத்துவது பரிசுத்த ஆவியேயன்றி இசை அல்ல.**

63. நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது. அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்குப்போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அதில் நிலைத்திருப்பீர்களாக. இந்தக் காரியத்தில் என்னோடு நீங்கள் ஏகசிந்தை உள்ளவர்களாய்க் காணப்படும்படி தேவன் உங்களுக்கு அநுக்கிரகம் செய்வாராக.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை, இரக்கம், சந்தோஷம், சமாதானம் உங்களனைவரோடுங்கூட அவருடைய வருகையின் பரியந்தம் நிலைத்திருப்பதாக.

ஏப்ரல், 2001

கிறிஸ்துவின் அன்பில்,

**சகோ. காலேப் யோசுவா.**